நாள்.15.11.2023

**அசல் வழக்கு எண். 109/2022**

வா.சா.1 - பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது பதில் வழக்குரையில் பாரா 2ல் முருகன் குடும்பதினரும், வாதி, பிரதிவாதிகளின் தந்தையும் வழக்கிடை சொத்தையும், அதன் தென்புற சொத்தையும் பரிவர்த்தனை செய்து அனுபவித்து வந்துள்ளதாக கண்டிருப்பது உண்மை அல்ல என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தென்புற சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அதன் விஸ்திரணம் தெரியுமா என்றால் 1 மா-விற்கு மேல் இருக்கும். வழக்கு சொத்தின் விஸ்திரணம் தெரியுமா என்றால் 1மா- 65 குழி. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சொத்து விபரத்தின் 7 ஏர்ஸ் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தும், அதற்கு தென்புறம் உள்ள சொத்தும் 1ம் பிரதிவாதியான எனது தம்பிக்கு விடுதலை பத்திரத்தில் குறைவான சொத்து கொடுக்கப்பட்டிருந்ததால் அதை ஈடு செய்வதற்காக வழக்கு சொத்தும், அதற்கு தென்புறம் உள்ள சொத்தும் பாகவீதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தின் உரிமையாளர் யார் என்றால் 1ம் பிரதிவாதி கிரிஸ்டின் பால்ராஜ். வழக்கு சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்தின் உரிமையாளர் யார் என்றால் 1ம் பிரதிவாதி கிரிஸ்டின் பால்ராஜ். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு தென்புறம் யாருடைய சொத்து உள்ளது என்றார் இமானுவேல் மற்றும் என் பெயரில் உள்ளது. அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் தென்புறத்தில் உள்ள சொத்தில் மேல் புறமா, கீழ்புறமா என்றால் மேல்புறம். இமானுவேல் சொத்திற்கு தென்புறம் யாருடைய சொத்து யாருடைய அனுபவம் உள்ளது என்றால் இமானுவேல், 1ம் பிரதிவாதி மற்றும் எனக்கு சொந்தமான தென்வடல் பாதை 3 செண்ட் உள்ளது. மேற்படி பாதையின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெற்கு-CMP வாய்க்கால், கிழக்கு-சேவியார், வடக்கு-1ம் பிரதிவாதி, மேற்கு இமானுவேல். நான் சொல்வதுபோல் மேற்படி 3 செண்ட் பாதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இமானுவேல் மற்றும் எனது பெயரில் உள்ள சொத்திற்கு அடுத்த தென்புறம் ரோடு உள்ளது என்றால் சரியல்ல. ரோடு உள்ளது என்றால் ரோடு இல்லை பாதை உள்ளது என்பதற்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளது. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யமுடியுமா

என்றால் தாக்கல் செய்யமுடியும். ஆற்றுக்கு வடபுறம் வாய்க்கால் அதற்கு வடபுறம் என்னுடைய சொத்து மற்றும் இமானுவேல் சொத்து உள்ளது. சேவியர் எனக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தில் 1-1/4 மா நிலம் உள்ளது. நான் சொல்லும் விடுதலை பத்திரம் 27.11.2013 ல் எனக்கும், எனது தம்பி 1-ம் பிரதிவாதிக்கும், சேவியர் என்பவர் எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 5ல் 1ம் பிரதிவாதிக்கு, அனுபவ சொத்திற்கு மேல்புறம் எனக்கு சேகரமாக 1 ஏக்கருக்கு சற்று கூடுதலான விஸ்திரணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ஏக்கருக்கு சற்று கூடுதலான இடத்திற்கு அடுத்த தென்புறம் ரோடு உள்ளது என்றால் இல்லை ஆற்று கரை உள்ளது. அது தார் ரோடு என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது சொத்து வழியாதான் ரோட்டிற்கு செல்லவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பி நேரடியாக ரோட்டிற்கு செல்ல பாதை கிடையாது என்றும், எனது சொத்து வழியாகதான் செல்லவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பிக்கு எனது சொத்தில் பாதை உரிமை உண்டா என்றால் இல்லை. ஆனால் எனக்கும், எனது தம்பிக்கும் உள்ள சொத்துக்கள் பாகபிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் அருளாயி. எனது தாயாருக்கு சொத்தமாக சொத்து இருந்ததா என்றால் 1 மா இருந்தது. எனது தாயார் 31-05-2023 ல் இறந்துவிட்டார். மேற்படி எனது தாயாருக்கு சொந்தமான 1 மா சொத்தானது எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சொந்தமான சொத்தா என்றால் எனது தாயார் எனக்கு தானா செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். எனது தாயார் இறப்பதற்கு 2 ஆண்டுகளுக்கும் முன்பு முதல் என்னுடன் தான் வசித்து வந்தார். அதற்கு முன்பு எனது தம்பியிடம் தான் வசித்து வந்தார். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 4ல் எனது தாயாருக்கு சொந்தமான 1 மா சொத்து எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சம பாகம் உரிமை உள்ளது என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் செப்டம்பர் 2022-ல் பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பதில் வழக்குரையில் எனது தாயாருக்கு சொந்தமான 1 மா நிலத்தை எனது தாயார் எனக்கு தாயார் செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்துள்ள விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் அன்றைய தேதியில் எனது தாயார் உயிருடன் இருந்ததால் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்த பதில் வழக்குரையில் எனது தாயாருக்கு சொந்தமான சொத்தில் 1ம்

பிரதிவாதிக்கு உரிமை உள்ளதை மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை எப்போது கிரையம் வாங்கினேன் என்றால் 26.08.2010 ல். நான் கிரையம் பெற்ற பிறகுதான் எனது சித்தப்பா சேவியர் என்பவர் 2013 ல் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வழக்கு சொத்து யாருக்கு சொந்தம் என்றால் ரெங்கசாமிக்கு சொந்தமான சொத்து. நான் ரெங்கசாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேனா என்றால் ரெங்கசாமி இறந்துவிட்டதால் அவருடைய இளைய மகனான குணசேகரன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். கிரையம் யாரிடம் பேசினேன் என்றால் குணசேகரணிடம். ஒப்பம் ஏதும் செய்துக்கொண்டோமா என்றால் இல்லை. கிரையம் பேசிய அன்றை தினமே பத்திரம் எழுதிக் செய்துக்கொண்டேனா என்றால் 2,3 நாட்கள் முன்பு கிரையம் பேசினோம். நானும், குணசேகரனும் தான் கிரையம் பேசினோம். எவ்வளவு ரூபாக்கு கிரையம் பேசினோம் என்றால் ரூ.20,000/-. பத்திரம் நான் தான் எழுதிச்சென்றேன் என்றால் சரிதான். பணம் எப்போது கொடுத்தேன் என்றால் பத்திரம் எழுதிய தேதியில் கொடுத்தேன். நான் குணசேகரன் என்பவரிடமிருந்து மட்டும்தான் கிரையம் வாங்கினேனா என்றால் நல்லம்மாள், குணசேகரன், மலையப்பன் ஆகியோர்களிடமிருந்து கிரையம் வாங்கினேன். மேற்கண்ட நபர்களை தவிற வேறு எந்த நபரிடமிருந்தும் கிரையம் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம்தான் நான் வாங்கிய கிரைய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 ம் நபர் மலையப்பன் ஆவார். மேற்படி வா.சா.ஆ.1 ல் நாங்கள் உங்களிடம் நாளது தேதியில் எங்களில் 2 வது இலக்கமிட்ட நபரின் குடும்பச் செலவுகளுக்காகவும், கடன்கள் தீர்க்கவும் இதனடியிற்கண்டுள்ள சாட்சிகளின் முன்னிலைரயில் ரொக்கமாக பெற்றுக்கொண்டவிட்ட வகையில், மேற்படி கிரயத் தொகை முழுவதும் ரொக்கம் கொடுத்துவிட்டதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பவித்ரா என்பவர் யார் என்றால் குணசேகரின் மகள். மேற்படி வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் பவித்ரா என்பவரிமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கிரைய தொகையை குணசேகரனிடம் கொடுத்ததாக எழுதவில்லை, மலையப்பனிடம் கொடுத்ததாகதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாங்கும்போது வழக்கு சொத்தில் என்ன இருந்தது என்றால் தென்னகன்று இருந்தது. வேறு ஏதும் இருந்ததா என்றால் 3 பலா மரக்கன்றுகள் இருந்தது. எத்தனை தென்னை மரங்கள் இருந்தது என்றால் 17

தென்னகன்றுகள் இருந்தது. கஜா புயலில் 12 தென்னைமரங்கள் விழுந்துவிட்டது. 5 தென்னை மரங்கள் மட்டும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் கிரையம் பெற்ற போது எத்தனை தென்னை மரங்கள் உள்ளதாக ஆவணத்தில் உள்ளது என்றால் 6 தென்னை மரங்கள் என்றால் சரிதான். எனது வழக்குரை பாரா 3 ல் வழக்கு சொத்தில் கஜா புயலில் விழுந்த தென்னை மரங்கள் போக மீதம் 6 தென்னை மரங்கள் மட்டுமே உள்ளது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் வாங்கிய கிரைய பத்திரத்தில் கண்டுள்ள 3 பலா மரங்கள் தற்போது உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்திற்கு வடபுறம், தென்புறம் அத்துக்கள் ஏதும் இல்லை என்றால் வரப்புகள் உள்ளது வேலி ஏதும் இல்லை. அசல் வழக்கை ஏன் என் தம்பி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து நான் தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்தில் 1ம் பிரதிவாதியான எனது தம்பி அதில் எனக்கு பங்கு உண்டு என கேட்டதால் அவருக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதியை எதற்காக அசல் வழக்கில் சேர்த்தேன் என்றால் கொச்சையான வார்த்தையால் என்னை திட்டியதால் சேர்த்தேன். எனது தம்பி என்னிடம் வழக்கு சொத்தை தனக்கு கிரையம் கொடுக்கும்படி கேட்டாரா என்றால் கேட்டார். எனக்க சொந்தமான தாவா சொத்தில் எனது தம்பி பங்கு கேட்டதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தம்பி அவரது வழக்கறிஞர் மூலமாக எனக்கு நோட்டிஸ் அனுப்பினாரா என்றால் அனுப்பினார். அந்த அறிவிப்பை படித்து பார்த்த பிறகுதான் நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தும், அதற்கு தென்புறம் சொத்தும் எனது தந்தை முருகையன் குடும்பத்தினரிடம் பரிவர்த்தனையாக வாங்கிய சொத்து என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் பிரதிவாதி முருகையன் வகையராவிடம் தாவா இடத்தை எனது தந்தை பரிவர்தனையாக செய்துக்கொண்டதை நான் பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி கேட்டு அதை நான் எழுதிவாங்கிக்கொண்டேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு. முருகையன் வகையராவிடமிருந்து 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கவேண்டிய பாகசொத்தை நான் மோசடியாக கிரையம் வாங்கிய விபரம் தெரியவந்ததாக 1ம் பிரதிவாதி சொல்லியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 24.05.2021 ல் 1ம் பிரதிவாதி சொந்தமான சொத்தை நான் கிரையம் வாங்கிவிட்டதால் அந்த சொத்தை 1 ம் பிரதிவாதி தனக்கு கிரையம் செய்துக்கொடுக்கும்படி கேட்டார் என்றால்

அதுபோன்ற எந்த சம்பவமும் நடைபெறவில்லை. தாவா சொத்தை நான் 1ம் பிரதிவாதியிடம் எழுதி தர ஒப்புக்கொண்டேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. 29.05.2021ல் தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி க்கு எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளதால் அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதியும், அவரது மனைவியும் நிலத்தை உழுது கொண்டிருக்கும்போது நான் நேரடியாக திருச்சிற்றம்பலம் காவல் நிலையத்திற்கு சென்று பிரதிவாதிகள் பெயரில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்ததில் புகார் கொடுத்ததால் அந்த புகாரின் பேரில் காவல் நிலைய ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எந்த உரிமை மூலம் இல்லை என சொல்லியதால் பிரதிவாதிகள் வா.சா.ஆ.6 அறிவிப்பை பிரதிவாதிகள் எனக்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 அறிவிப்பு கொடுத்த பிறகும் தாவா சொத்தை வழக்கம்போல் நான் அனுபவம் செய்துவருகிறேன் என்றால் சரிதான். நான் மீண்டும் திருச்சிற்றம்பலம் காவல் நிலையத்திற்கு சென்று பிரதிவாதிகள் பெயரில் புகார் கொடுத்தேனா என்றால் தாவா இடத்தை நான் டிராக்டர் மூலமாக உழுவு செய்துக்கொண்டிருக்கும்போது பிரதிவாதிகள் 2 பேரும் என்னை தடுத்ததால் புகார் கொடுத்தேன். மேற்படி விபரத்தை எனது வழக்குரை மற்றும் நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. திருச்சிற்றம்பலம் காவல் நிலைய அதிகாரியின் செல். நம்பர்-6382456394 என்ற கைபேசியிலிருந்து 04.09.2021ம் தேதி பிரதிவாதியின் கைபேசிக்கு 07.09.2021ம் ஆஜர்ஆகும்படி ஒரு போன் வந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் திருச்சிற்றம்பலம் காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் பெயரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னிட்டு பிணையில் வெளியில் வந்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு பட்டுக்கோட்டை காவல் துறை துணை கண்காணிப்பாளர் எங்கள் இருவரையும் அழைத்து விசாரணை செய்தாரா என்றால் செய்தார். காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள் கிராம நிர்வாக அலுவலர், முருகைய வகையரா மற்றும் கிராம வாசிகளை விசாரித்தாரா என்றால் இல்லை. என் குடும்பம் மற்றும் பிரதிவாதிகள் மற்றும் செல்லையன் ஆகியோர்களை மட்டும் விசாரணை செய்தார். காவல் துறை துணை கண்காணிப்பாளர் என்ன விசாரணை செய்து முடிவு சொன்னார் என்றால் நான் தாவா சொத்தை அனுபவம் செய்துவருவதை பிரதிவாதிகள் தடை செய்யகூடாது

என்றும் நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை என்னிடம் பிரதிவாதிகள் ஏதும் பிரச்சனை செய்யகூடாது என அறிவுறுத்தி அனுப்பிவிட்டார். காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள் கிராம நிர்வாக அலுவலர், முருகைய வகையரா மற்றும் கிராம வாசிகளை விசாரித்ததில் 1ம் பிரதிவாதிக்குதான் பாத்தியப்பட்டது என்றும், அவரிடம் நான் ஏதும் பிரச்சனை செய்யக்கூடாது என்றும், தாவா சொத்து பிரதிவாதிகளுக்குதான் பாத்தியப்பட்டது என்றும் , பிரதிவாதிகள் எனக்கு சொந்தமான சொத்து வழியாக சென்று ரோட்டிற்கு சென்றுவருவதை தடை செய்யகூடாது என என்னிடம் எழுதிவாங்கிக்கொண்டார் என்றால் சரியல்ல. அதன்படி தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்துவருகிறார் என்று சொன்னால் சரியல்ல. குணசேகரன் , நல்லம்மாள், மலையப்பன் ஆகியோர்களை சாட்சிகளாக விசாரிக்க உள்ளேனா என்றால் தேவையில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 6 அறிவிப்பில் குணசேகரன் , மலையப்பன் ஆகியோர்களுக்கு பிரதிவாதிகள் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பாகசொத்திற்கு உரிய ஆவணம் இல்லாமையால் அதன் விபரம் தெரிந்த நான் நல்லம்மாள் வகையராவிடம் பொய்சொல்லி என் பெயரில் பணம் கொடுக்காமல் கிரையம் ஆவணம் எழுதிவைத்துள்ளேன் என்ற விபரம் 1ம் பிரதிவாதிக்கு 2021ம் ஆண்டில் தான் தெரியவந்ததால் என் பெயரில் உள்ள பத்திரத்தை 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் செய்துக்கொடுக்கும்படி கேட்டுவந்ததால் நான் கொடுக்கமறுத்ததால் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கு சண்டை சச்சரவு ஏற்பட்டதால் அசல் வழக்கை நாக் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு பொய் வழக்கு என்றும், தள்ளுபடி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.